
# <u>ஸ்ரீ அன்னையின் சின்னமும் அவருடைய சக்திகளும்</u>

<u>(The Mother's Symbol and Her Powers)</u>




---

**ஸ்ரீ அன்னையின் சின்னம்**

நடுவில் உள்ள வட்டம் இறைவனின் மெய்யுணர்வைக் குறிக்கிறது. நான்கு இதழ்கள், அன்னையின் நான்கு சக்திகளைக் குறிக்கிறது. சுற்றிலுமுள்ள பன்னிரெண்டு இதழ்கள் அன்னையின் செயல்பாட்டிற்காக வெளிப்படும் சக்தியைக் குறிக்கின்றன: முதல் எட்டு தெய்வீகத்தையும், கடைசி நான்கு மனித இனத்தை நோக்கிய மனநிலை ஆகும். CWSA:32:14-26

## ஸ்ரீ அன்னையின் நான்கு சக்திகள்

**மகேஸ்வரி ( ஞானம்)**

**மகாகாளி (வலிமை)**

**மகாலட்சுமி (ஒத்திசைவு)**

**மகாசரஸ்வதி (பூரணத்துவம்)**

மனித முயற்சியன்று, தவமன்று, அன்னையின் சக்தி ஒன்றே மூடியைப்பிளந்து திரையைக் கிழித்து பாத்திரத்தை உருவாக்கி, இருளும் பொய்மையும் மரணமும் துயரமுமாகவுள்ள இப்புவியிடை பேருண்மையையும், பேரொளியையும் தெய்வீக வாழ்வையும், ஆனந்தத்தையும் கொண்டுவர முடியும். CWSA 32:14 -26

**ஸ்ரீ அன்னையின் 12 பண்புகள்**

நேர்மை - பணிவுடைமை - நன்றியுடைமை - விடாமுயற்சி - ஆர்வம் - ஏற்புத்திறன் - முன்னேற்றம் - துணிவுடைமை - நற்குணம் - தாராளத்தன்மை - சமத்துவம் - அமைதி



மாத்ரிமந்திரின் பொன்வட்டுகள் பரப்பட்டுள்ள கோளத்தைச் சுற்றி பன்னிரண்டு இதழ்கள் அமைந்துள்ளன, ஸ்ரீ அன்னை பன்னிரெண்டு பண்புகளுக்கும் பெயர் கொடுத்தார், ஒவ்வொரு பண்புக்கும் ஒரு குறிப்பிட்ட நிறத்தையும் வழங்கினார். மேலும் அவர் 800க்கும் மேற்பட்ட மலர்கள் ஒவ்வொன்றுக்கும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெயரைக் கொடுத்தார். எனவே ஒவ்வொரு பண்பும் ஒரு மலரால் குறிக்கப்படுகிறது.



இதைத்தான் நாம் “தெய்வீகம்” என்கின்றோம்: நாம் பெற வேண்டிய அனைத்து அறிவும், நாம் பெற வேண்டிய அனைத்து சக்தியும், நாம் ஆக வேண்டிய அனைத்து அன்பும், நாம் அடைய வேண்டிய அனைத்து முழுமையும், ஒளியிலும் ஆனந்தத்திலும் வெளிப்படுவதற்கு நம்மிடமுள்ள அனைத்து இணக்கமான மற்றும் முற்போக்கான சமநிலையும், அனைத்து புதிய மற்றும் அறியப்படாத ஒளியும் உணரப்பட வேண்டியதாகும். CWM 14:17

**நேர்மை**




தாவரவியல் பெயர்: அஸ்தர் அமெல்லஸ் (Aster amellus)
ஆன்மீகப் பெயர் : எளிமையான நேர்மை

*அனைத்து முன்னேற்றங்களின் தொடக்கம்.*

1. முற்றிலும் நேர்மையாக இருங்கள், மற்றவர்களை ஏமாற்ற முயற்சி செய்யாதீர்கள், உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ள ஒருபோதும் முயற்சி செய்யாதீர். CWM 14:70

2. நேர்மையான ஒவ்வொரு செயலும் அதனுள் தன் வெகுமதியை சுமந்து நிற்கிறது: தூய்மையாகுதல், மேல்நோக்கி உயருதல், ஒருவர் சிறு பொய்யைக்கூட சொல்ல மறுப்பதால் பெறுகின்ற விடுதலை ஆகிய உணர்வுகளே அந்த வெகுமதிகள். நேர்மையே காவலாக, பாதுகாப்பாக, வழிகாட்டியாக, இறுதியில் மாற்றும் சக்தியாக இருக்கிறது. CWM 08:400

**பணிவுடைமை**



தாவரவியல் பெயர்: அக்ரோஸ்டிஸ் நெபுலோசா (Agrostis nebulosa)
ஆன்மீகப் பெயர் : பணிவுடைமை

*போற்றுதலுக்குரிய எளிமை*

1. பணிவுடைமை என்பது உள்ளுணர்வின் நிலையாகும், அதில் மெய்யுணர்தல் என்னவாக இருந்தாலும், பரம்பொருள் உங்கள் முன்னால் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். CWM 03:175

2. எனக்குத் தெரியாது, எனக்கு ஒன்றும் தெரியாது என்பதற்கான அங்கீகாரமே தன்னடக்கம் ஆகும். மேலும், அதற்கும் அப்பால் ஒன்று இருப்பதாக நமக்குத் தோன்றுவது என்னவெனில், மிக உண்மையாக, மிக மேன்மையாக, மிகவும் பற்று இன்றி இருத்தல்.

ஸ்ரீ அன்னை, மலர்களும் அவற்றின் ஆன்மீக மகத்துவமும், பகுதி 1: 119

**நன்றியுடைமை**



தாவரவியல் பெயர்: இப்போமியா கார்னியா (Ipomoea carnea)
ஆன்மீகப் பெயர் : நன்றியுடைமை

*நீயே மூடியுள்ள கதவுகளையெல்லாம் திறந்து பாதுகாக்கும்*
*அருள் ஜீவனுள் செல்லச் செய்கிறாய்.*

1. அகங்காரம் தான் விரும்புவதையும், அதனிடம் இல்லாததையும் விரும்புகிறது. இது அதன் நிலையான ஆழ்ந்தயோசனை ஆகும். என்ன கொடுக்கப்பட்டதோ அதை ஆன்மா அறிந்திருக்கிறது, மேலும் முடிவற்ற நன்றியறிதலுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறது. CWM 14: 257

2. "பூமியில் உடல், பொருள் ரீதியாக நன்றியறிதலினுள் மிகத் தூய்மையான மகிழ்ச்சி வடிவத்தை ஒருவர் காண்கிறார்". CWM15:192

"மனித உள்ளுணர்வுக்கு எட்டும் அனைத்து இயக்கங்களிலும் நிச்சயமாக நன்றியறிதல் ஒன்றே உங்களின் அகங்காரத்தில் இருந்து உங்களை வெளியே இழுத்து வருகிறது."
ஸ்ரீ அன்னை, மலர்களும் அவற்றின் ஆன்மீக மகத்துவமும், பகுதி 1: 122

**விடாமுயற்சி**



தாவரவியல் பெயர்: காலெண்டுலா அஃபிஸினாலிஸ் (Calendula officinalis)
ஆன்மீகப் பெயர் : விடாமுயற்சி

*முடிவு வரைச் செல்லும் தீர்மானம்*

1. அனைத்து தடைகளையும் விடாமுயற்சி உடைத்தெறியும். CWM14:162

2. "ஒருவர் முன்னர் ஒருபோதும் செய்யவில்லை என்றாலும், ஒரே விஷயத்தை முதல்முறை ஒருவர் எப்படி செய்தாரோ அதே தீவிரத்துடன் நூறுமுறை மீண்டும் செய்யத் தொடங்குவதற்கு தயாராக இருக்கவேண்டும். ஒருவர் அவ்வாறு தொடர்ந்தால், அவர் வெற்றியடைவதற்கான நேரம் வரும். வெற்றி பிறகு மிகவும் நிலையாக இருக்கும்." CWM07:104

ஒருவர் அவ்வாறு தொடர்ந்தால், அவர் வெற்றியடைவதற்கான நேரம் வரும். வெற்றி பிறகு மிகவும் நிலையாக இருக்கும். CWM 08:42

**ஆர்வம்**



தாவரவியல் பெயர்: நிக்டந்திஸ் அர்பார் திரிஷ்டிஸ் (Nyctanthes arbor-tristis)
ஆன்மீகப் பெயர் : ஆர்வம்

*எண்ணற்றதாயும் பிடிவாதமாயும் உள்ளது, சலிக்காமல் திரும்பத் திரும்பச் செய்கிறது.*

1. ஆர்வமே உச்ச சாகசத்துக்கான சுவையாகும், கணித்தல் இல்லாமல், இருப்பு இல்லாமல், திரும்பப் பெறுவதற்கான ஒரு சாத்தியம் இல்லாமல், உன்னை முழுவதுமாகப் பிடித்துக்கொண்டு உன்னை வீசியெறியும் ஓர் ஆர்வம், தெய்வீக கண்டுபிடிப்பின் பெரும் சாகசத்தினுள், தெய்வீக சந்திப்பின் பெரும் சாகசம், தெய்வீக மெய்யுணர்வில் இன்னும் மிகப்பெரிய சாகசமாக இருக்கிறது. CWM 08:40

2. ஒருவர் உறுதியான, குறைபடாத ஆர்வத்தையும், விழிப்பு மற்றும் மாறாத ஆர்வத்தையம் ஜீவன் முழுவதிலும் பெற்றிருத்தல் வேண்டும், உங்களை முற்றிலும் பிடித்துக் கொள்ளும் ஓர் ஆர்வம், தெய்வீகத்துடன் ஐக்கியப்படுத்தும்... தெய்வீக உணர்விற்கு தம்மை முற்றிலும் கொடுக்கின்ற ஓர் ஆர்வம், எனவே தெய்வீகமே எல்லாமுமாக இருக்கும். . CWM 14:78

**ஏற்புத்திறன்**



தாவரவியல் பெயர்: கிளாடியோலஸ் ஷோர்டுலானஸ் (Gladiolus xhortulanus)

ஆன்மீகப் பெயர் : ஏற்புத்திறன்

*தெய்வீக ஆன்மாவின் ஜீவியம் மற்றும் அதனிடம் சரணடைந்துவிடு.*

1. மலர்கள் ஏற்புத்திறன் உள்ளவை, அவை நேசிக்கப்படும்போது அவை மகிழ்ச்சியடைகின்றன. CWM 16:371

2 ஏற்புடைமை என்பது தெய்வீகச் சக்தியை பெற்றுக்கொள்ளுகிற ஆற்றல், அதன் பிரசன்னத்தையும், அதில் தெய்வீக அன்னையின் பிரசன்னத்தையும் உணருதல், அது வேலைசெய்ய விட்டுவிடுதல், ஒருவர் தம்முடைய பார்வை, மனஉறுதி, செயல் ஆகியவற்றுக்கு வழிக்காட்டுதல் என்பதாகும். CWSA 29:266

**முன்னேற்றம்**



தாவரவியல் பெயர்: கதரந்தஸ் ரோஸஸ் (Catharanthus roseus)
ஆன்மீகப் பெயர் : முன்னேற்றம்

*நாம் பூமியில் வந்திருப்பதன் நோக்கம்.*

1. நீ என்னவாக இருந்தாய் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டாம், நீ என்னவாக இருக்க விரும்புகிறாய் என்பதைப் பற்றி மட்டுமே சிந்தித்துப் பார், நீ முன்னேறுவது உறுதி. CWM 15:76

2. எல்லாவற்றிற்கும் மேலாக, முன்னேற்றத்திற்கான மனஉறுதி, ஒளியை ஏற்றிவைக்கும் சுய - தூய்மையாக்கல் ஆகும். முன்னேற்றத்திற்கான மனஉறுதி. வலுவான மனஉறுதி உள்ளவர்களுக்கு ஆன்மிக முன்னேற்றம், தூய்மையாக்கல் ஆகியவற்றை நோக்கி அது திருப்பிவிடும், அவர்கள் தானாகவே தமக்குள் ஒளியை ஏற்றிக்கொள்வார்கள். CWM 08:251

**துணிவுடைமை**



தாவரவியல் பெயர்: கலோட்ரோபிஸ் ஜிகாண்டியா (Calotropis gigantean)
ஆன்மீகப் பெயர் : துணிவுடைமை

*துணிவுடையது, எல்லா ஆபத்துகளையும் எதிர்த்து நிற்கிறது.*

1. ஒரு மெழுகுவர்த்தியின் சுடரில் இருந்து இன்னொரு மெழுகுவர்த்தியை ஏற்றுவது போல, தைரியமுள்ள எவரும் மற்றவர்களுக்கு தைரியத்தைக் கொடுக்க முடியும். CWM 02:187 -188

2. ஒரு மட்டற்ற தைரியம், ஒரு பரிபூரண நேர்மை, நீங்கள் கணக்கு ஏதும் போடாமல் அல்லது பேரம் பேசாமல் உங்களை முழுவதுமாக கொடுத்தல், பெறுகின்ற எண்ணத்துடன் நீங்கள் கொடுக்காதீர்கள், பாதுகாப்பாக இருப்பதற்கான நோக்கத்துடன் நீங்கள் அளிக்காதீர்கள், நிரூபணம் தேவைப்படுகின்ற ஒன்றில் நம்பிக்கை கொள்ளாதீர்கள் - பூமியில் முன்னேறிச் செல்ல இது இன்றியமையாதது, - இது ஒன்றே உங்களை எல்லா ஆபத்துகளில் இருந்து பாதுகாக்க முடியும். CWM 260:261

**நற்குணம்:**



தாவரவியல் பெயர்: ரோஸேடா ஒடோரட்டா (Roseda odorata)
ஆன்மீகப் பெயர் : இரக்க மனப்பான்மை

*கவனத்தை ஈர்க்காமல் வாழ்க்கையை நறுமணம் வீசச் செய்கிறது.*

1. உன் இதயம் ஒளிரும் நற்குணத்தின் இல்லமாகும். அது உன் முழு ஜீவனையும் ஆட்சிச் செய்யட்டும். CWM 17:366

2. ஒருவர் தன்னால் முடிந்ததையும், தன்னால் அளிக்க முடிந்த மிகச் சிறந்ததையும் செய்யவேண்டும், ஆனால், ஒரு முடிவை எதிர்பார்க்காமல், ஒரு முடிவினை நோக்காமல் அதைச் செய்யவேண்டும். இந்த மனப்பான்மையால், ஒரு நற்செயலுக்கு ஒரு வெகுமதி - நல்லது கிடைக்கும் என ஒருவர் எதிர்பார்க்கிறார், ஏனென்றால், வாழ்க்கையை இது எளிதாக்கிவிடும் என்று ஒருவர் நினைக்கிறார் - அது நற்செயலில் இருந்து அனைத்து மதிப்பையும் நீக்கிவிடுகிறது. CWM 3:264

**தாராளத்தன்மை**



தாவரவியல் பெயர்: இம்பேசன்ஸ் பால்சாமீனா (Impatiens balsamina)
ஆன்மீகப் பெயர்: ஈகை

*பேரமின்றி அது தன்னைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது.*

1. பெருமையும் தாராள குணமும் ஆன்மாவின் நுட்பமான வான்வெளி ஆகும்: அவை இன்றி, ஒருவர் இருட்டறையில் ஒரு பூச்சியைக் காண்பது போலாகும். (மதர்ஸ் அஜண்டாவில் கூறியவை 10:340)

2. இது ஒரு சக்தி, ஒரு தெய்வீக இயக்கம் பரவுகிறது, சிதறுகிறது, அதிக சடப்பொருளில் இருந்து மிக அதிக ஆன்மிக தளங்கள் வரை, இயற்கையின் அனைத்து நிலைகளிலும் அது பெற்றிருக்கும் எல்லாவற்றையும், சக்திகளையும் பொருட்களையும் அது சுதந்திரமாக வெளியே எறிகிறது. உண்மையாக தெய்வீகத்திற்கு சரணாகதி அடைந்தால், தெய்வீகப் பணிக்கு அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும். CWM 3:119

.

**சமத்துவம்**



தாவரவியல் பெயர்: அபெரிஸ் (Iberis)

ஆன்மீகப் பெயர்: சாந்தம்

*நிலையான அமைதியும் சாந்தமும்*

1. எல்லா சூழ்நிலைகளிலும் புன்னகைக்கத் தெரிந்த ஒருவர் ஆன்மாவின் உண்மையான சமத்துவத்துக்கு மிக நெருக்கமானவர்.

2. நமது உணர்வு மற்றும் இயல்பின் ஒரு பரிபூரண சமத்துவம் என்பது ஒரு வழியாகும், அதனால் பிரச்சனையும் அறியாமையும் நிறைந்த வெளிப்புற உணர்வில் இருந்து, உட்புறத்திலுள்ள பரலோக இராச்சியத்திற்கு திரும்பிச் சென்று, அங்கே மேன்மை, ஆனந்தம், அமைதி ஆகிய நிலையான இராச்சியங்களின் பேருணர்வைப் பெறமுடியும்.....CWSA 23 – 24:699

**அமைதி**



தாவரவியல் பெயர்: குர்குமா செடோரியா (Curcuma zedoaria)
ஆன்மீகப் பெயர்: அமைதி

*நீ எப்போதும் விரும்புவதையே விரும்புவது*
*எல்லாச் சூழ்நிலையிலும் அசைக்கமுடியாத*
*அமைதியை அனுபவிக்க ஒரே வழியாகும்.*

1. அமைதியை உணர், அமைதியாக வாழ், அமைதியை அறிந்துகொள் - அமைதி, அமைதி......CWM 11: 9

2. ஒருவர் எதனை உணர்ந்துகொள்ள விரும்புகிறார் என்பதைக் கருத்தில் கொள்ளாமல், இந்த பரிபூரணமான, நிலையான அமைதியை நிலைநாட்டுவதன் மூலமாக அவர் அதைத் தொடங்க வேண்டும்; ஒருவர் வேலை செய்ய வேண்டியதற்கான அடிப்படை இதுவே. CWM 09: 298

   அமைதியும் அசைவின்மையும் நோய்க்கு மிகச் சிறந்த தீர்வாகும். நமது உயிரணுக்களில் நாம் அமைதியைக் கொண்டுவர முடியும்போது, நாம் குணமடைகிறோம். CWM 15:151